# இந்தி எதிர்ப்பு தினம்

(நமது நிருபர்)

திருப்பூர், ஜூலை, 1.

இந்தி எதிர்ப்பு தினம் தோழர் குரு ராமலிங்க செட்டியார் அவர்களின் தலைமையில் கொய்யலாற்றில் இன்று மாலை 7 மணிக்கு நடந்தது. இவ்வூர் மகா ஜனங்கள் அடங்கிய ஒரு பெரிய கூட்டம் கறுப்புக் கொடி ஊர்வலத்துடன் இந்தி எதிர்ப்பு சுலோகங்கள் கோஷித்துக் கொண்டு மாலை கொய்யலாற்றுக்கு வந்து சேர்ந்தது.

தோழர்கள் பழனிசாமி, மொய்தீன் டி. எஸ். சுப்ரமண்ய பிள்ளை, பிரபல வக்கீல் டி. ஆர். சுந்தரம் பிள்ளை முதலியோர் இந்தி கட்டாய பாடத்தை தக்க ஆதாரங்களுடன் கண்டித்துப் பேசினார்கள். பின் உண்ணாவிரதமிருக்கும் தோழர் ஸ்டாலின் ஜெகதீசனைப் பாராட்டியும், இந்தி கட்டாயப் பாடத்தைக் கண்டித்தும் இந்தி எதிர்ப்புத் தலைவர்களையும் தொண்டர்களையும் அடக்கு முறைகளால் தண்டிக்கும சென்னை அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்தும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறை வேறின.